இனிமையான குழந்தைகளே! நீங்கள் இந்த பதீதமான (தூய்மையற்ற) உலகத்திலிருந்து தனது புத்தியின் தொடர்பை நீக்கி எல்லைக்கப்பாற்பட்ட சன்னியாசியாக ஆக வேண்டும், சன்னியாசி என்றால் முற்றிலும் தூய்மையானவர் மற்றும் பக்குவமான யோகி ஆவார்.

கேள்வி: எந்த நிலை ஏற்படும்போது மாயையின் புயல் காற்று முடிந்து போகிறது?

பதில்: என்னுடைய கணவர், என்னுடைய குழந்தை என்ற என்னுடையது, என்னுடையது என்ற திலிருந்து புத்தியின் தொடர்பு நீங்கும்போது; என்னுடையவர் ஒரு சிவபாபா, வேறு யாருமில்லை லி இது புத்தியில் உறுதியாக இருக்கும்போது; ஒரு தந்தையிடமே புத்தியின் முழுமையான தொடர்பு ஈடுபடும்போது லி மாயையின் புயல்கள் ஓய்ந்து போகும்

பாடல்: யார் வந்தது என் மன வாசலுக்கு. . .

ஓம் சாந்தி. பகவானுடைய மகா வாக்கியம் லி ஆத்மாக்களின் தந்தை, அவர் பரமபிதா பரம ஆத்மா என சொல்லப்படுகிறார் என்பதை குழந்தைகள் புரிந்து கொண்டுள்ளனர். தந்தை தானே புரிய வைக்கிறார் லி என்னுடையது ஆகாரத்தில் சூட்சுமத்தில் பெரிய ரூபம் எதுவும் கிடையாது. ஆத்மாவைப் பற்றி சொல்கிறோம் லி நட்சத்திரம் போன்றது, புருவ மத்தியில் இருப்பது என்பது போல நானும் பரம ஆத்மாவாக இருக்கிறேன், எனது மகிமை உயர்ந்தது ஆகும். ஞானக்கடலாக இருப்பவர். மற்றபடி இவ்வளவு பெரிய சிலையைப் போல அல்ல. இவ்வளவு பெரிதாக இருந்தேன் என்றால் இந்த சரீரத்தில் நுழைய முடியாது. இந்த சிவலிங்கத்தின் பூஜை செய்யும் போது பெரிதாக உருவாக்குகின்றனர். கட்டை விரல் போல் என சொல்கிறோம். ஆத்மா என்றால் ஆத்மா, அவரை மட்டும் பரம என சொல்கிறோம், அவர் பரமதாமத்தில் வசிக்கிறார். இந்த சமயத்தில் பேய்களின் உலகம், அசுர சம்பிரதாயமாக உள்ளது என நீங்கள் அறிவீர்கள். சத்யுகத்தில் இந்த பாரதத்தில் தேவதைகளின் இராஜ்ஜியம் இருந்தது, இப்போது இருப்பது அசுர இராஜ்ஜியம் ஆகும். என்னென்னவெல்லாம் சாப்பிடுகிறார்கள், பாருங்கள்! மாமிசம், மது முதலானவை இராட்சசத்தனமான ஆகாரங்கள் (உணவு) ஆகும். இந்த விஷயத்தையும் கூட புரிந்து கொள்வதில்லை. பள்ளியில் கூட சிலருக்கு நல்ல சிந்தனைகள் இருக்கும், சிலருக்கு இரஜோகுணமான, சிலருக்கு தமோகுணமான சிந்தனைகள் இருக்கும். யார் பிறருக்கு புரிய வைக்க முடிவதில்லையோ அவர்களை முட்டாள் என்பார்கள். பிரம்மாகுமார், குமாரிகளிலும் கூட வரிசைக்கிரமமான மாகாரதிகள், குதிரைப்படை, காலாட் படையினர் பலர் இருக்கின்றனர், அவர்களால் நல்ல விதமாக பிறருக்கு புரிய வைக்க முடிவதில்லை. ஞானம் முழுமையாக இல்லாத காரணத்தால் சேவைக்கு குந்தகம் விளைவிக்கின்றனர் (டிஸ்சர்வீஸ்). யாருக்குள் எவ்வளவு ஞானம் உள்ளதோ அவ்வளவு புரிய வைப்பார்கள். வரிசைக்கிரமமாக இருக்கின்றனர். சில இடங்களில் தவறுகளும் செய்கின்றனர். நாம் தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கிறோம் என்ற போதை குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். நான் தூய்மையற்றவர்களின் உலகத்தில் வருகிறேன் என தந்தை தானே சொல்கிறார். சத்யுகத்தில் இவர்தான் நாராயணனாக இருந்தார், இப்போது மீண்டும்

இவருடைய உடலில் வந்திருக்கிறேன், இவரைத்தான் நரனிலிருந்து நாராயணனாக ஆக்குகிறேன். முதல் நம்பர் பூஜைக்குரிய வராகவும் இவர் இருந்தார், இப்போது முதல் நம்பர் பூஜாரியாகவும் இவர் ஆகியிருக்கிறார். பிறகு இவருடையது தான் ஆல்ரவுண்ட் நடிப்பாக இருக்கிறது. இது எனக்காக நிர்ணயிக்கப்பட்ட உடல் ஆகும். இது மாற முடியாது. வேறு ஒருவருக்கு எப்போதாவது வாய்ப்பு கொடுப்பேன் என்பதல்ல. இது உருவாகி உருவாக்கப்பட்ட நாடகம் ஆகும். இதில் மாற்றம் ஏற்பட முடியாது. நான் தூய்மையற்றவர் களின் உலகில் வருகிறேன், ஆனால் யாரையாவது தூய்மையற்றவர் என சொன்னீர்கள் என்றால் கோபித்துக் கொள்வார்கள் என பாபா சொல்கிறார். ஆனால் அனைவரும் அசுர சம்பிரதாயத்தினர் என பகவானுடைய மகா வாக்கியம் இருக்கிறது என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டும். பகவான் என்றால் பகவான் நிராகாரமானவர், பிரம்மாவோ, விஷ்ணுவோ, சங்கரனோ அல்லது கிருஷ்ணரோ அல்ல. பரமாத்மாவாகிய நான் கூட உங்களைப்போல இருக்கிறேன் என சொல்கிறார். பகவானுடைய மகா வாக்கியம் லி நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்க வருகிறேன். யோகத்திற்கு எவ்வளவு மகிமை உள்ளது. நிறைய யோக ஆசிரமங்கள் திறக்கப் பட்டிருக்கின்றன. அதில் ஹடயோகம் முதலானவைகளை கற்பிக்கின்றனர். ஆனால் நீங்கள் யோகபலத்தின் மூலம் முழு உலகையும் சொர்க்கமாக ஆக்குகிறீர்கள். உலகத்தையே மாற்றம் செய்து விடுகிறீர்கள். முழு உலகமுமே யோகத்தில் (நினைவின் தொடர்பில்) இருப்பதில்லை, யோகத்திற்கு எவ்வளவு மகிமை உள்ளது! அதன் மூலம் குறிப்பாக பாரதம் சொர்க்கமாக ஆகிறது. ஆனால் சொர்க்கத்தை யார் உருவாக்கியது என யாருக்கும் தெரியாது, கண்டிப்பாக யாராவது இப்படி சொர்க்கத்தை உருவாக்குபவர் இருப்பார். நான்தான் வந்து தேவதை யாவதற்கான கர்மங்களை கற்பிக்கிறேன் என தந்தை சொல்கிறார். இது மிகவும் சகஜமே யாகும். அவர்கள் நிறைய யக்ஞத்தை செய்கின்றனர். நீங்கள் இங்கே யக்ஞத்தை ஏதாவது வளர்க்கிறீர்களா என்ன? ஊதுபத்தியும் கூட நறுமணத்திற்காக ஏற்றி வைக்கிறீர்கள். மற்றபடி இங்கே சடங்கு, காரியங்கள் செய்யக்கூடிய விஷயம் எதுவும் கிடையாது. அதனால் தந்தை தன்னுடைய அறிமுகத்தைக் கொடுக்கிறார் லி நான் உங்களைப் போலவே ஆத்மாவாக இருக்கிறேன். ஆனால் நான் மறுபிறவி எடுப்பதில்லை, ஜென்மம் எடுக்கிறேன், ஆனால் மரணத்தில் வருவதில்லை, என்னுடைய ஜெயந்தியை கொண்டாடுகின்றனர். நான் இந்த உடலில் படிக்க வைப்பதற்காக வந்து சென்றபடி இருக்கிறேன் எனும் போது அதனை (வந்து செல்வதை) மரணம் என சொல்ல முடியாது. நான் தேவதையாக ஆக்குவதற்காக வருகிறேன். இப்போது யார் வந்து படிக்கின்றனரோ... யார் கல்பத்திற்கு முன்பு படித்திருப்பார் களோ அவர்கள்தான் படிப்பார்கள். வெகு காலங்களாக பிரிந்திருந்த அதே காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகள், மற்றவர்கள் 84 பிறவிகளில் வருவதில்லை, நாம்தான் 84 பிறவிகளின் சக்கரத்தை முழுமையாக சுற்றுகிறோம். மனிதர்கள் பல பிறவிகள் எடுத்து சோர்ந்து விடுகின்றனர். நாங்கள் 84 பிறவிகளின் சக்கரத்தில் வர விரும்பவில்லை என உங்களிடம் சொல்கின்றனர். ஆனால் நாம் எவ்வளவு பயில்வான்களாக இருக்கிறோம், இன்னமும் குஷிதான் அடைகிறோம். நாம் இந்த 84 பிறவிகளின் சக்கரத்தை நினைவு செய்து செய்து சக்கரவர்த்தி இராஜாவாக ஆகி விடுகிறோம். அவர்களின் கொடியில் கூட (அசோக) சக்கரம் இருக்கிறது, பிறகு அவர்கள் இராட்டையை போட்டு விட்டார்கள். அவற்றிற்கு முன்பாக உங்களுடைய அரசு

முத்திரை சரியாக இருக்கிறது. மேலே சிவபாபா, கீழே திரிமூர்த்தி மற்றும் சக்கரம் என முற்றிலும் சரியாக அமைந்திருக்கிறது. உங்களுடைய அந்த சிவனின் கொடி முற்றிலும் சரியாக உள்ளது.

சன்னியாசம் இரண்டு விதமானது என உங்களுக்குப் புரிய வைத்திருக்கிறேன். ஒன்று துறவற மார்க்கத்தின் சன்னியாசம், அவர்கள் காட்டிற்குச் செல்கின்றனர், அது அரை குறை சன்னியாசம் ஆகும். உங்களுடையது முழுமையான சன்னியாசம் ஆகும். எதன் மீது? முழு அசுர உலகின் மீது சன்னியாசம் செய்கிறீர்கள், என்னுடைய கணவர், என்னுடைய குழந்தை, என்னுடைய குரு...... அந்த எல்லா என்னுடையது, என்னுடையது என்பதிலிருந்து புத்தியின் தொடர்பை நீக்குகிறீர்கள். என்னுடையவர் ஒரு சிவபாபா தவிர வேறு யாரும் இல்லை. எதுவரை இந்த நிலை வரவில்லையோ அதுவரை புயல்கள் வந்தபடி இருக்கும். தொந்தரவு அடைந்து கொண்டே இருப்பார்கள். தந்தை முழு அசுர உலகை சன்னியாசம் செய்விக்கிறார், ஏனென்றால் இவையனைத்தும் சாம்பலாக வேண்டியுள்ளது. அனைத்தும் பஸ்பமாக (சாம்பலாக) வேண்டும் என அவர்கள் சொல்வதில்லை. நீங்கள் சம்பந்திகளுக் கிடையில் இருக்கிறீர்கள், ஆனால் அவர்களை பார்த்தபடியே புத்தி அங்கே (பாபாவிடம்) ஈடுபட்டிருக்கிறது. என்னுடையது என எதுவும் கிடையாது எனும்போது காமம், கோபம் யாரிடம் உண்டாகும்? இந்த யுக்தி மிகவும் நல்லது லி ஆனால் புத்தியில் பதிந்தால்தான். இது இராஜயோகம் எனப்படுகிறது. நீங்கள் நினைவின் தொடர்பை ஈடுபடுத்துகிறீர்கள், இராஜ்யத்தை எடுக்கிறீர்கள். அது ஹடயோகமாகும். இவை ஆழமான விஷயங்கள் ஆகும். யோகிகள் உலகில் பலர் உள்ளனர். ஆனால் ஒருவருடைய யோகமும் (நினைவின் தொடர்பும்) என்னுடன் இல்லை என பாபா கூறுகிறார். எனக்குப் பதிலாக நான் வசிக்கக் கூடிய இருப்பிடமான பிரம்ம தத்துவத்தின் மீது நினைவின் தொடர்பு உள்ளது - பாரதவாசிகள் தமது இருப்பிடமாகிய இந்துஸ்தானத்தை தமது தர்மம் (இந்து) என புரிந்து கொண்டு உட்கார்ந்திருப்பது போல அவர்களும் தம்மை பிரம்மத்தின் குழந்தைகள் என புரிந்து கொள்கின்றனர். ஆண் குழந்தைகள் எனவும் சொல்வதில்லை. ஆண் குழந்தைகள் என சொன்னால் பிறகு ஆஸ்தி தேவை. தத்துவத்தில் ஐக்கியமாவோம் என அவர்கள் சொல்கின்றனர். பாபாவுக்கு அனுபவம் உள்ளது. பல சன்னியாசிகள், குருமார் களுடன் அனுபவம் செய்திருக்கிறார். அர்ஜுனனுக்குக் கூட பல குருமார்கள் இருந்தனர் என காட்டுகின்றனர். நீங்கள் அனைவரும் அர்ஜுனர்கள். இந்த சமயத்தில் முழு உலகின் மீது இராவண இராஜ்யம் உள்ளது. முழு உலகமும் இலங்கையாக உள்ளது. ஒரு இலங்கையின் (சிலோன்) தீவு மட்டும் அல்ல. அது எல்லைக்குட்பட்ட இலங்கையாகும். ஆனால் எல்லைக்கப் பாற்பட்ட இலங்கை என்பது முழு உலகமுமே ஆகும். இப்போது முழு உலகத்தின் மீது இராவண இராஜ்யம் உள்ளது. இராமனின் இராஜ்யத்தில் இவ்வளவு மனிதர்கள் இருக்க வில்லை. இராம இராஜ்யம் இருக்கும்போது இராவண இராஜ்யம் இல்லை. எங்கே சென்று விடுகிறது? கீழே பாதாளத்தில் சென்று விடுகிறது. பிறகு இராவண இராஜ்யம் வரும்போது இராம இராஜ்யம் கீழே சென்று விடுகிறது. இது நாடகம் அல்லவா! சக்கரம் சுற்றும்போது சத்யுகம் மேலே வந்து விடுகிறது. துவாபர, கலியுகம் கீழே சென்று விட்டது என்றால் சத்யுகம், திரேதா யுகம் கீழேயிருந்து மேலே வந்து விடும். சக்கரத்தின் விஷயம் ஆகும். அவர்கள் இப்படி எழுதி விட்டனர். மற்றபடி எதுவும் கடலுக்குள் சென்று விடுவதில்லை அல்லது கடலிலிருந்து

வெளிப்படுவதும் இல்லை.

பாபா புரிய வைக்கிறார் : இவை அதே ஆழமான புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். இதில் தூய்மை முதன்மையானது, மேலும் யோகம் உறுதியாக இருக்க வேண்டும். இது முழுமையான சன்னியாசம் எனப்படுகிறது. இந்த உலகத்திலிருந்து புத்தியின் தொடர்பு முடிந்து விட்டது. இந்த விஷயங்களை உங்களில் கூட சிலர் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்கள். அனைவரும் புரிந்து கொண்டுவிட்டால் ஞான கங்கைகள் ஆகி விடுவார்கள். சிறு நதிகளாக ஆவார்கள், கால்வாய்களாக ஆவார்கள். நல்லது, முழுக்கு மட்டும் போட்டு வீட்டில் இருந்தபடி சொன்னால் கூட கொஞ்சம் புரிந்து கொண்டிருக்கின்றனர் என புரிந்து கொள்ளலாம். ஆனால் வீட்டில் கூட சொல்ல முடிவதில்லை. எப்படிப்பட்ட ஏழையாக இருந்தாலும் வீட்டில் கீதா பாடசாலை திறக்க முடியும். ஒரே ஒரு அறை மட்டும் இருக்கலாம், அதில் உண்டு, குடித்து, உறங்குகிறீர்கள். நல்லது, வேலை முடிந்ததும் சுத்தம் செய்து பிறகு இந்த வகுப்பை நடத்துங்கள். மூன்று அடி நிலத்தில் இவ்வளவு பெரிய மருத்துவமனை திறக்க முடியும். செல்வந்தர்களின் விஷயத்தை விடுங்கள். தந்தை ஏழைப் பங்காளர் அல்லவா ! செல்வந்தர்கள் எங்களுக்கு இதுவே சொர்க்கம் என சொல்கின்றனர். நல்லது. நீங்கள் உங்களுடைய சொர்க்கத் திலேயே குஷியாக இருங்கள் என பாபா சொல்கிறார். நான் உங்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? தானமும் ஏழைகளுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. பெரிய மனிதர்கள் இங்கே கீழே உட்காருவதற்கு தயங்கு வார்கள். நன்றாக உங்கள் மாளிகையிலேயே இருங்கள் என பாபா சொல்கிறார். என்னிடம் ஏழைகள் வரட்டும், அவர்கள் நன்றாக படிக்கட்டும். மற்றவர்களுக்கு சொல்ல முடியாது என்றால் சிறிய குளமாகக் கூட இல்லை என்றாகிறது. நீங்கள் பெரிய நதியாக ஆக வேண்டும். மம்மா, பாபாவைப் பின்பற்ற வேண்டும். ஆனால் வீட்டில் கூட சொல்ல முடியாவிட்டால் உள்ளங்கையளவு நீராகக் கூட இல்லை என அர்த்தம். ஞான கங்கையரின் முன்னால் பாபாவுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. பலர் பாபாவின் முன்னால் அமர்ந்து கேட்டார்கள் என்றால் குஷியடைகின்றனர். ஆனால் இங்கிருந்து எழுந்தால், படிகளில் கீழே இறங்கினால் போதையும் கூட இறங்கியபடி செல்கிறது. பிறகு வீட்டுக்குச் சென்று சேர்ந்து விட்டால் அதே வீண் பேச்சுக்கள் தொடங்கி விடுகிறது. பாபா நடத்தையின் மூலம் புரிந்து கொள்கிறார். சந்திக்க வருகின்றனர். என்னுடைய கணவர், என்னுடைய குழந்தை என சொல்கின்றனர். அட, உங்களுக்கு கணவர் எங்கிருந்து வந்தார். சொர்க்கத்திற்குச் செல்வதற்காக வருகிறீர்கள், ஆனாலும் என்னுடையது, என்னுடையது என்பதில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது, இதுவே போதுமானது. செரிக்கும் அளவு கொடுத்தால் போதும். பாபா சுருக்கமாக புரிய வைத்திருக்கிறார். யோகத்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். மற்றபடி இராஜ்ஜியத்திற்காக ஞானம் தேவைப்படுகிறது. இரண்டு பாடங்கள் உள்ளன. பாபாவும் கூட நினைவின் தொடர்பில் இருப்பதற்கான முயற்சி செய்கிறார். அப்போது சொல்கிறார் அல்லவா லி மறக்கவும் வேண்டாம், நினைக்கவும் வேண்டாம். நல்லது!

இனிமையிலும் இனிமையான, காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த பழைய உலகை முற்றிலுமாக சன்னியாசம் செய்ய வேண்டும். தூய்மை மற்றும் யோகத்தின் பாடங்களில் முதல் நம்பர் எடுக்க வேண்டும்.

2. ஞான கங்கை ஆகி தூய்மையற்றவர்களை தூய்மையாக்கும் சேவையை செய்ய வேண்டும். மம்மா பாபாவைப் பின்பற்றி பெரிய நதியாக ஆகுங்கள்.

வரதானம் : பிராமண வாழ்க்கையில் குறைந்த செலவில் நிறைந்த சேவைக்கூடிய அலௌகீகத் தன்மையில் நிறைந்தவர் ஆகுக,

சுலோகன்: இந்த அலௌகீக பிராமண பிராமண வாழ்க்கையின் விசேஷமான சுலோகன் லி குறைந்த செலவில் நிறைந்த சேவை செய்வதாகும். செலவு குறைவாக இருக்கும், ஆனால் பிராப்திகள் அற்புதமானதாக இருக்கும், அதாவது ரிசல்ட் (முடிவுகள்) மிக நன்றாக இருக்கும். வார்த்தை களில் செயல்களில் செலவு குறைவாக இருக்கும் பொழுது தான் அலௌகீகத்தன்மை நிறைந்த வாழ்க்கை என்று சொல்ல முடியும். குறைந்த நேரத்தில் அதிக செயல் புரிவது, குறைந்த வார்த்தைகளில் தெளிவு அதிகமாக இருப்பது, குறைந்த எண்ணங்களில் சக்தி நிறைந்ததாக இருப்பது லி இதைத் தான் குறைந்த செலவில் நிறைந்த சேவை என்று சொல்ல முடியும். யார் அனைத்து பொக்கி^ங்களையும் குறைவாக பயன்படுத்துகிறார்களோ, அவர்களுடைய கிடங்கு (பொக்கிஷம்) நிறைந்திருக்கும்.

சுலோகன் : பாபா மற்றும் சேவையில் உண்மையான அன்பு இருந்தால் குடும்பத்தினுடைய அன்பு தானாகவே கிடைக்கும்.

## மாதேஷ்வரி அவர்களின் விலைமதிப்பில்லா மகா வாக்கியங்கள்

இப்பொழுது இந்த அனைத்து தர்ம நூல்களின் தாயாகிய கீதையில் பகவானுடைய மகாவாக்கியமானது குழந்தைகளே, வெற்றி இருக்குமிடத்தில் நான் இருப்பேன், இதுவும் பரமாத்மாவின் மகாவாக்கியமாகும். மலைகளிலேயே இமயமலையில் நான் இருக்கிறேன், மேலும் பாம்புகளிலேயே கருநாகத்தில் நான் இருக்கிறேன், ஆகையால் மலைகளில் உயர்ந்ததாக கைலாய மலையை காட்டுகின்றனர், மேலும் பாம்புகளில் கருநாகத்தில், எனவே இதிலிருந்து நிரூபணம் ஆவது என்னவென்றால் பரமாத்மா ஒருவேளை அனைத்து பாம்புகளிலேயே கருநாகத்தில் மட்டும் தான் இருக்கிறார் என்றால் மற்ற பாம்புகளில் அவருடைய தாக்கம் இல்லை, ஒருவேளை பரமாத்மா உயர்ந்ததிலும் உயர்ந்த மலையாக இருக்கிறது, அதற்கு கீழே இருக்கும் மலைகளில் இருப்பதில்லையா, எங்கு வெற்றி இருக் கிறதோ, அங்கு என்னுடைய பிறப்பு, அதாவது தோல்வியில் இல்லை. இதிலிருந்து இந்த பரமாத்மா சர்வவியாபி இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. ஒரு பக்கம் இப்படியும் சொல்கிறார்கள், மறுபக்கம் அவரை பல வடிவங்களில் வருவதாகவும், பரமாத்மாவை 24 அவதாரங்களில் காட்டப்பட்டிருக்கிறது, ஆமை, மீன் முதலிய அனைத்து ரூபங்களில் பரமாத்மாவை இருப்பதாக சொல்கிறார்கள். இப்பொழுது இது தான் அவர்களுடைய அதிபுத்தி சாலித்தனமாக பரமாத்மாவை அனைத்து இடத்திலும் இருப்பதாக புரிந்து

கொண்டு இருக்கின்றனர், இந்த கலியுக நேரத்தில் மாயை தான் அனைத்து இடத்திலும் இருக்கிறதே தவிர பரமாத்மா எப்படி அனைத்து இடத்திலும் இருக்க முடியும்? நான் மாயாவிடத்தில் விற்றீருப்பதில்லை என்று கீதையில் சொல்லப்படுகிறது, இதிலிருந்து பரமாத்மா அனைத்து இடத்திலும் இருப்பதில்லை என்று நிரூபணம் ஆகிறது.

(2) இப்போது நாம் இதனை தெரிந்து கொண்டோம், நிராகாரி உலகம் என்று சொல்லும் போது நிராகாரர் என்பதன் பொருள் அவருக்கு எந்த் உருவம் இல்லையென்பதில்லை, நிராகாரி உலகம் எனும் போது இதன் பொருள் அவசியம் ஒரு உலகம் உள்ளது, ஆனால் அது இந்த பூலோகம் (ஸ்தூலமான) போன்ற வடிவத்தில் இல்லை, அப்படியே பரமாத்மா நிராகாரர் ஆனால் அவருக்கென்று சூட்சும ரீபம் அவசியம் உள்ளது. ஆக ஆத்மாவான நமக்கு பரமாத்மா விற்குமான இருப்பிடம் நிராகாரி உலகமே. நாம் உலகம் எனும் வார்த்தையை உச்சரிக்கும் போதே இதிலிருந்து புலனாகிறது அது ஒரு உலகம் மேலும் அங்கே ஆத்மாக்கள் இருக்கிறார்கள், எனவே தான் உலகம் எனும் பெயர் உள்ளது. உலகிய மனிதர்கள் பரமாத்மாவின் ரூபம் அகண்ட ஜோதி தத்துவம் என்று புரிந்துள்ளார்கள். அது பரமாத்மாவின் இருப்பிடமாகும். அதனை ஓய்விடம் என்று சொல்லப்படும். நாம் பரமாத்மாவின் வீட்டை பரமாத்மா என்று சொல்ல முடியாது. இன்னொன்று ஆகாரி உலகம், அங்கே பிரம்மா, விஷ்ணு, சங்கர் தேவதைகள் ஆகாரி (ஒளி) வடிவில் இருக்கின்றனர். இது சாகாரி (மனித) உலகம். இதில் இரண்டு பாகம் உள்ளது. ஒன்று விகாரமற்ற சொர்க்கம் அங்கே அரை கல்பம் சர்வ சுகமும் நிரம்பப் பெற்றிருக்கும், தூய்மையும் சாந்தியும் இருக்கும். மற்றொன்று விகாரி கலியுகம். துக்கம், அசாந்தியான உலகம். அதனை இருவேறு உலகம் என்று ஏன் சொல்கிறோம்? ஏனெனில் சொர்க்கமும், நரகமும் பரமாத்மாவின் படைப்பு என்று மனிதர்கள் சொல்கிறார்கள். இது குறித்து பரமாத்மாவின் மகாவாக்கியம் யாதெனில் குழந்தைகளே! நான் துக்கமான உலகை படைக்கவில்லை, நான் படைத்தது சுகமயமானஉலகமே. இந்த துக்கம், அசாந்தி நிறைந்த உலகம் என்பது மனித ஆத்மாக்கள் தன்னையும், தந்தையையும் மறந்த காரணத்தால் இந்த கணக்கு வழக்கை அனுபவிக்கின்றனர். மாறாக சுகமும், புண்ணியமும் நிலவிய உலகில் அங்கே எந்த சிருஷ்டியும் இயங்கவில்லை என்பதல்ல. ஆம் நிச்சயம் அங்கே தேவதைகளின் வசிப்பிடம் இருந்ததாக நாம் சொல்கிறோம். அங்கே உலகம் இயங்கியது, ஆனால் உண்மை யாதெனில், அங்கு விகாரத்தால் பிறப்பு நிகழவில்லை. அதனால் அந்தளவிற்கு கர்ம பந்தனமும் இல்லை. அந்த உலகை கர்ம பந்தனமற்ற சொர்க்கம் என சொல்லப்பட்டது. ஆக ஒன்று நிராகாரி (ஆத்மலோகம்) மற்றொன்று ஆகாரி (ஒளி உலகம்) மூன்றாவது சாகாரி (மனித) உலகமாகும். நல்லது. ஓம் சாந்தி.